**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி**

முன்னிலை: திரு. அ.செல்வகுமார், பி.இ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்

2020ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ம் நாள் வியாழக் கிழமை

<u>அசல் வழக்கு எண்.19/2018</u>

முருகன், த/பெ மார்கண்டன், இந்து, வயது சுமார் 34,
இருப்பிடம் பனங்காடடுக்கொல்லை, வாடமங்கலம் அஞ்சல், போச்சம்பள்ளி தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம்.

... வாதி

( எதிராக )

1. மாணிக்கம், த/பெ வேடியப்பன், வயது சுமார் 66, இந்து,
2. செல்வம், த/பெ வேடியப்பன், வயது சுமார் 51, இந்து,
3. தருமராசன், த/பெ மாணிக்கம், வயது சுமார் 33, இந்து,
4. மார்கண்டன், த/பெ முனுசாமி, வயது சுமார் 64, இந்து,
5. பழனி, த/பெ மார்கண்டன், வயது சுமார் 33, இந்து,
6. ரவி , த/பெ மார்கண்டன், வயது சுமார் 37,இந்து,

1 முதல் 6 பிரதிவாதிகள் அனைவரும் வசிக்குமிடம்
பனங்காட்டுக்கொல்லை கிராமம், வாடமங்கலம் அஞ்சல், போச்சம்பள்ளி தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம்.

... பிரதிவாதிகள்

| | |
|---|---|
| வழக்குத் தேதி: 21.03.2018 | தாவா மதிப்பு ரூ.8,00,000 /- |
| வழக்குமூலம் : 15.08.2002, 26.09.2016, 06.10.2017 | வாதிக்குரிய 1/12 வரிசை பங்கு மதிப்பு ரூ.50,000/- |
| | தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டப்பிரிவு 37(2)-ன் படி செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம் ரூ.5,000/- த.நீ.க.சட்டப்பிரிவு 25(d)-ன்படி செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம் ரூ.150/-, த.நீ.க.சட்டப்பிரிவு 25(d)-ன்படி செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம் ரூ.150/-, த.நீ.க.சட்டப்பிரிவு 25(d)-ன்படி செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம் ரூ.150/-மொத்தம் ரூ. 5,450/- |

வாதி இவ்வழக்கை வழக்குசொத்துக்களை 12 சம பாகங்களாக பிரித்து அதில் ஒரு பாகத்தை ஒதுக்கி தனி சுவாதீனம் அளிக்க பிரதிவாதிகளுக்கு உத்தரவிடவும், தவறினால் நீதிமன்றம் மூலம் தனி சுவாதீனம் பெற அனுமதியளிக்கவும், 1-ம் எதிர்வாதி 3-ம் எதிர்வாதியுடன் ஏற்படுத்தியுள்ள தானசெட்டில் பத்திரமும், 1, 3 எதிர்வாதிகள் 2-ம் எதிர்வாதிகளின் பெயரில் ஏற்படுத்தியுள்ள கிரய பத்திரமும் 1, 3 எதிர்வாதிகள் இறந்து போன சேகர் பெயரில் ஏற்படுத்தியுள்ள கிரயப்பத்திரமும், சட்டப்படி செல்லாது என விளம்புகை செய்யவேண்டியும் தாக்கல் செய்துள்ளார்.

இவ்வழக்கு 21.03.2018-ம் தேதியில் இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்னர் 11.02.2020-ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S.R. மாணிக்கப்பிரபு அவர்கள் ஆஜராகியும், 1, 2, 4 முதல் 6

பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M. ஜெயபாலன் அவர்கள் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாத்தரப்பினராகக் கருதியும், 3-ம் பிரதிவாதியை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாத்தரப்பினராகக் கருதியும், அது சமயம் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் வாதி தரப்பு வாதத்தைக் கேட்டும் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும்.

## தீர்ப்பாணை

1. வழக்குசொத்துக்களை 12 சமபாகங்களாக பிரித்து அதில் ஒரு பாகத்தை வாதிக்கு ஒதுக்கி தனி சுவாதீனம் அளிக்க பிரதிவாதிகளுக்கு உத்தரவிட்டு தீர்ப்பாணையிடப்படுகிறது.

2. தவறினால் வாதி நீதிமன்றம் மூலம் தனி சுவாதீனம் பெற அனுமதியளித்து தீர்ப்பாணையிடப்படுகிறது.

3. 1-ம் எதிர்வாதி 3-ம் எதிர்வாதியின் பெயரில் 26.09.2016-ம் தேதியில் ஏற்படுத்திய தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஆவண எண். 1210/2016 சட்டப்படி செல்லாது என விளம்புகை செய்து தீர்ப்பாணையிடப்படுகிறது.

4. 1, 3 எதிர்வாதிகள் 2-ம் எதிர்வாதியின் பெயரில் 26.09.2016-ம் தேதியில் ஏற்படுத்திய கிரயப் பத்திரம் ஆவண எண். 1211/2016 சட்டப்படி செல்லாது என விளம்புகை செய்து தீர்ப்பாணையிடப்படுகிறது.

5. 1, 3 எதிர்வாதிகள் இறந்துபோன சேகர் பெயரில் 26.09.2016-ம் தேதியில் ஏற்படுத்திய கிரயப்பத்திரம் ஆவண எண். 1212/2016 சட்டப்படி செல்லாது என விளம்புகை செய்து தீர்ப்பாணையிடப்படுகிறது.

6. வாதிக்கு பிரதிவாதிகள் செலவுத் தொகை ரூ.7,860/- செலுத்த வேண்டும் என தீர்ப்பாணையிடப்படுகிறது.

( வாதி தரப்பில் செலவு விபரப் பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை)

**<u>சொத்து விவரம்</u>**

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், பாரூர் சார் பதிவகத்திற்குட்பட்ட புளியம்பட்டி கிராமம்,

| வ.எண். | புல எண். | பரப்பு ஹெக். ஏர் | தீர்வை ரூ.பை |
|---|---|---|---|
| 1 | 303/1E | 0.7.50 | 0.16 |
| 2 | 303/3A | 0.8.50 | 0.17 |
| 3 | 303/2M1 | 0.26.08 | 0.72 |
| 4 | 306/2M2 | 0.23.50 | 0.65 |
| 5 | 306/2M3 | 0.24.00 | 0.66 |
| 6 | 306/2M4 | 0.1.42 | 0.06 |
| | மொத்தம் | 0.91.00 | 2.42 |

## செலவு விவரப்பட்டியல்

| வாதி தரப்பு செலவுத் செலவுத் தொகை விவரம் | | பிரதிவாதிகள் தரப்பு செலவுத் தொகை விவரம் |
|---|---|---|

( இருதரப்பிலும் செலவு விவரப்பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை)

| | | |
|---|---|---|
| 1. பிராது ஸ்டாம்ப் | - ரூ. 5,450.00 | --- |
| 2. வக்காலத்து ஸ்டாம்ப் | - ரூ. 10.00 | --- |
| 3. வழக்கறிஞர் கட்டணம் | - ரூ. 2,400.00 | --- |
| மொத்தம் | ரூ. 7,860.00 | |

2020ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ம் நாள் என்னுடைய கையொழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் போடப்பட்டது.

ஒம்/- திரு. அ. செல்வகுமார், பி.இ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல
நடுவர், போச்சம்பள்ளி.

// உண்மை நகல் //